# சத்திய தரிசனம்



"ஓங்கார நாத மயம்......
ஓம் சிவ சக்தி மயம்......"

'LET US NOBLE THOUGHTS COMES FROM EVERYWHERE '

*- Rig. Veda -*

ஆத்மசெடிகளுக்கான மாதாந்த
[illegible] வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தளிர் - 11

# ஆத்ம செடிகள்....

**சேவை செய்வதே ஆனந்தம்... ...**

**Love all. Serve all — BABA**

ஆத்ம செடிகளே! பகவான் இந்த ஆண்டினை சேவையாண்டு எனப் பிரகடனம் செய்துள்ளார். சர்வதேச பிரகடனம் 'இந்த ஆண்டு சகிப்புத்தன்மைக்குரிய ஆண்டு என்று கூறுகிறது. எம்மாலியன்ற சேவையைப் புரிந்து பகவானின் அன்புக்குப் பாத்திரம் ஆகும் ஆர்வத்துடன் நீங்கள் இருக்கிறீர்கள். சேவை செய்யும்படி பகவான் எம்மைத் தூண்டும் காரணம் என்ன? சேவைக்கும் சகிப்புத்தன்மைக்கும் உள்ள ஆத்ம தொடர்பு என்ன? இவற்றினை சீர்தூக்கி சேவையைச் சாதனையாக்க வேண்டியது உங்களுடைய கடமை அல்லவா?

தொண்டு என்பதற்கு அண்டத்திலும், பிண்டத்திலும் ஆண்டவனைக் கண்டு அதன் மூலம் மாதாவின் கருப்பையில் மீண்டும் வாராத நிலையை, மீண்டும் பிறவாத நிலையை அடைதல் என்று சிவயோகர் கூறியதை நினையுங்கள். ஆண்டவனிடத்து அன்பு செலுத்துவதற்குரிய உபாயம் மனித குலத்திடம் அன்பு செலுத்துதலும். மனித குலத்திற்கு சேவை செய்தலுமே என்று பகவான் கூறுகிறார். சேவை என்பது உனது திருப்திக்காக அல்ல உன்னுள்ளே நிறைந்துள்ள இறைவனது திருப்திக்காகவே சேவை என்கிறார் பகவான்.

நாம் சேவைப் பணியைப் பெருமை தேடும் விடயமாகக் கொள்கிறோம் உடலையொட்டிய உதவிகளைச் செய்வதையே சேவை என்று எண்ணுகிறோம். அங்கவீனருக்கான உதவி, வறியோர்க்கும் முதியோர்க்கும் உணவு, உடை வழங்கல், அபலைகளான சிறுவர்களைப் பராமரித்தல் என்று பட்டியல் போட்டு. பிறரிடமிருந்து பொருளைத்திரட்டி பெருமித உணர்வுடன் சேவை புரியச் சித்தமாகிறோம்: இத்தகைய சேவைகள் வரவேற்கத் தக்கவை, பாராட்டுக்குரியவை. இத்தகைய தேவைகளை நிறைவு செய்யும் பணியால் பலர் ஆறுதல் பெறுகிறார்கள். இத்தகைய உடலோடு தொடர்பான தேவைகளை நிறைவு செய்வதால் அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களது துன்பம், கவலை தற்காலிகமாக நிறைவு செய்யப்படுகிறது.
மீண்டும் தேவை எழும்போது துன்பமும் துயரமும் உருவாகிறது.
ஓங்கி எரியும் அக்கினிச் சுவாலை தணியும் போது ஒரு விறகுக்
கட்டைப் போடுகிறோம், அது மீண்டும் ஓங்கித் திருப்தியாக எரி
கிறது. மீண்டும் தணிகிறது. மீண்டும் விறகின் தேவை எழுகிறது.

ஆனால் கவலையினின்றும் விடுபட நிரந்தர வழி என்ன? துன்
பங்களுக்கான உண்மைக் காரணத்தை அறிந்து, உண்மை நிலையை
உணர்ந்தால் கவலையினின்றும் விடுபட முடியும். இதுவே ஆத்ம
ஞானம், பேரறிவு எனப்படும். இத்தகைய பேரறிவை தானும்
பெற்று, பிறரும் பெறத் தூண்டுவதே சேவையின் குறிக்கோளா
கும், சேவை மூலம் தன்னை அறியச் செய்யும் சாதனை சுயசேவை
என்றும், பிறர் பொருட்டு ஆற்றும் சேவை பரசேவை என்றும் பக
வான் கூறுகிறார். சேவை மூலம் ஆத்மஞானத்தை அடைதலே
ஒப்பற்ற பெருஞ் சேவையாகும்.

மனித வாழ்வு ஆனந்தமானது. ஞான உணர்வு நிரம்பப் பெற்
றது உண்மை அறிந்து வாழும் வாழ்க்கையே உயிர்வாழ்க்கை
எனப்படும். இதுவே சத்திய வாழ்வு, இடர்ப்பாடு இல்லாத வாழ்வு.
அஞ்ஞானம் மரணத்தைவிடக் கொடியது. அறிவு உயிரை ஓம்புகி
றது. அறிவு உட்பகையான காமம், குரோதம், உலோபம், மோகம்,
மதம், மாச்சரியம், என்ற ஆறினையும் புறப் பகையையும் வெல்
லக் கூடிய கருவி. ஞானமே பெருவாழ்வு தருவது. ஞானத்தை
வழங்கும் அருட்கொடையே மேலான சேவை. ஒருவருக்கு உதவி
செய்தலிலும், உதவும் மனப்பாங்கே எம்மை பேரறிவின் பக்கம்
திருப்புகிறது. தீமையை எண்ணாத மனமும், உதவும் மனப்பாங்
குமே துயர்நீக்கும் உபாயம்.

ஆத்ம ஞானத்தைப் பெற விவேகமும் வைராக்கியமும் தேவை.
நல்ல கல்வி என்பது பற்றை நீக்குதலாகும். பற்று நீங்கவே ஞான
நிஷ்டை கைகூடுகிறது. நமது வீடுகளெல்லாம் அன்னசத்திரங்களா
கவும், நமது வீதிகள் அறச்சாலைகளாகவும், தர்மசத்திரங்களாக
மாறினாலும் உலகத்தின் துன்பம் நீங்குமா? என்று எண்ணிப்பா
ருங்கள். சேவை செய்வதன் மூலம் அன்பு செலுத்தப் பழகுகிறோம்.
அகமுகமாக நோக்க வாய்ப்பு ஏற்படுகிறது. அன்பு செலுத்தும்
போது துன்பந் தோன்றினால் அதற்கு காரணம் பற்றே. மெய்யன்பு
என்பது பற்றுதல் இல்லாதது. தான் செய்கின்ற சேவைக்கு
பாராட்டோ, புகழோ, பிரதியுபகாரமோ, நன்றியோ கடவுளிடத்
தும் உயிர்களிடத்தும் எதிர்பார்ப்பது பற்றினாலேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையான சேவையின் அடையாளம் ஆத்ம ஞானமே. அதாவது பெருவாழ்வு, பேரறிவு, பேரன்பு இம்மூன்றுமே சேவைத் தருநியாகும்.

பெருவாழ்வு — சத்
பேரறிவு — சித்
பேரன்பு — ஆனந்தம்.

சத், சித், ஆனந்தம் இந்த மூன்றையும் சேவையின் ஊடாக அடைய வேண்டும். உண்மையான ஆத்ம சொரூபம் சேவையினூடாக வெளிப்பட வேண்டும் என்பதே பகவான் சேவையை வலியுறுத்துவதன் நோக்கமாகும்.

• மூட்டை சுமப்பவன் தான் சுமக்கும் மூட்டைமீது சிறிதும் பற்று வைப்பதில்லை. அது அவனது உடைமை ஆகாது. சுமப்பதற்கான கூலிமீதே அவனது கவனம், அதே போலச் சேவையே பற்றாகிவிடக் கூடாது. சேவை மூட்டை சுமப்பதற்கும், பெறும் கூலி ஆத்ம சொரூபத்தை அறியும் பேரறிவுக்கும் ஒப்பானது.

*பெருவாழ்வு:*

கௌதம புத்தர் உலகக் கவலைகள் அறியாது வளர்க்கப்பட்டார். அவர் ஒரு மரண ஊர்வலத்தைப் பார்த்தார். நரை திரையுடன் கூடிய முதியவரைப் பார்த்தார், நோயாளியைப் பார்த்தார் கூடவே கவலையும் பிறந்தது. அவருடைய ஆத்ம சொரூபம் வெளிப்படுத்தற்கான சந்தர்ப்பத்தின் எழுச்சியே அது. புத்தருடைய உள்ளத்தில் இரக்கம் இருந்தது. நாம் தினமும் எத்தனை பிரேதங்களை பார்க்கிறோம். எம்மைப் பயந்தான் பற்றிக்கொள்ளும். பற்று நீங்கி ஞானந்தேடும் மனோநிலை பிறப்பதில்லையே! புத்தர் தனது சேவைக்கான எதுவித பிரதியுபகாரத்தையும் எவரிடமும் எதிர்பார்க்கவில்லை. தனது ஆத்ம விடுதலையைக் கூட நாடாது உலகத்தின் துன்பத்திற்கு விடிவுதேட விரும்பிய பெரும் ஞானி. ஞானோதயத்தின் பின்பு சேவை புரிவதற்காக மனிதனாக வாழ விரும்பியவர் என்கிறார் பகவான்.

விசாக பௌர்ணமி புத்தர் பரிநிர்வாணம் அடைந்த நாள். புத்தர் மனுக் குலத்திற்கான சேவையை ஆரம்பித்த நன்னாள். சித்திரை இயேசுபிரான் உயிர்த்தெழுத்த நாள் தனது சேவைப் பணியின் மகிமை உலகிற்கு அறியத்தந்த நாள். மரணமில்லாப் பெருவாழ்வே சேவையின் பயன் என உலகிற்கு உணர்த்திய நாள். உலகம் இரு பெரும் ஒப்பற்ற சேவையாளர்களைக் கண்டிருக்கிறது. ஒருவர் கௌதம புத்தர் மற்றவர் இயேசுபிரான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"புத்தனைப் புரிந்து கொண்டவர்கள் மிகச் சொற்பமானவர்களே" என்கிறார் யோகர்சுவாமி. புத்தர் செய்த சேவையை இந்தச் சேவை ஆண்டில் நினைவு கூருங்கள். "நீ வினை செய்யும்பொழுது உலகத்திற்கு ஓயாது நலம் தேடும் எண்ணத்துடன் செய்" என்கிறது கீதை. உலகத்தவர்களின் கவலை நீக்கும் வழிவகை ஒன்றினையே புத்தர் சிந்தித்தார். அந்தச் சிந்தனை அவரைப் புத்தபகவானாக ஆக்கியது. புத்தர் கடவுளைப்பற்றி ஒரு வார்த்தையும் உலகிற்கு கூறவில்லை. அதனால் அவரை நாஸ்திகன் என்று சொல்லத் துணிகிறார்கள். புத்தரிடம் சுயநலம் அறவே இல்லை, சுய நலம் உள்ளவன் கடவுளைப் பற்றி இடையறாது சிந்தித்தாலும் அவனை ஆஸ்திகன் என்று ஏற்க முடியாது. ஒவ்வொரு சாதாரண மனிதனையும் அவன் எத்தகையவனானாலும் அவனை புனிதனாகவும் ஒழுக்கசீலன் ஆகவும் தெய்வ நிலைக்கு உயர்த்துவதையே குறியாகக் கொண்டு புத்தரது உள்ளம் செயற்பட்டது. ஒவ்வொரு சாதாரணமானவனும் போதி சத்துவனாக (ஞான நிலை), புத்தனாக (விழிப்பு நிலை) வரமுடியும் என்பதையே கௌதமர் கூறினார். பகவானும் ஒவ்வொரு மனிதனும் கடவுளாக முடியும் என்பதையே நிலைநிறுத்த சேவை செய் என்கிறார்.

பேரன்பு:

பந்தபாசம் கருதிச் செய்வது தொண்டு ஆகாது. சேவை செய்பவனது உள்ளத்தில் அன்பைக் கனிய வைப்பது. பேரன்பை மிளிர வைப்பது தன்னுயிர்போல மன்னுயிர் ஓம்புவதே பேரன்பு.

"அண்ட பிண்டமெங்கும் அதுவெனக்
கண்டு தொண்டு செய்வது தகுதி"

என்றுணர்வதே பேரறிவு. நாம் கண்ணால் காணும் முகம் எல்லாம் நம் நினைவில் பதிகிறதா? இல்லை. பற்றும் பாசமும் வைத்தவர் முகம் மட்டுமே நினைவில் நிற்கிறது. பற்றற்றுப் பார்ப்பதால், காண்பவர் யாவரையும் தெய்வ அம்சமாக வேறுபாடற்றுப் பார்ப்பதால் எல்லோர் முகமும் பதிகிறது. பேரன்பு பிறக்கிறது. புத்தர் வீடுதோறும் பிச்சை ஏற்று உண்டார். அவருடைய அன்பு மனைவியும், மகளும்கூட பிச்சையிட்டனர். எல்லோரையும் போலவே அவர்களையும் பேரன்புடன் நோக்கினார். சுயநலத்துடன், பந்தபாசத்துடன் பார்ப்பதால் துன்பம் ஏற்படுகிறது. "இன்பமே எந்நாளும் துன்பமில்லை" என்ற பெருவாழ்வே புத்தருடையது. பற்றை ஒழி. இம்சையை கைவிடு" என்றார் புத்தர். இவை இரண்டும் நீங்க தெய்வீகம் வெளிப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவையாளன் ஒருவன் தன் சேவையினூடாக நன்றியையோ பிரதியுபகாரத்தையோ எதிர்பார்க்கக் கூடாது. உன்னால் பணி செய்யப்பட்டவன், உன்னைத் தூற்றும்போதோ, நன்றியற்றுச் செயற்படும் போதோ நீ அடையும் சகிப்புத்தன்மையால் நீ பக்குவம் அடைகிறாய், சேவைக்கும் சகிப்புத்தன்மைக்கும் ஆத்மீகத்திற்கு முள்ள தொடர்பை எண்ணிச் சேவை செய்யக் கற்றுக்கொள்ளுங்கள்.

பேரறிவு:

நான் ஆத்ம சொரூபம், நான்புத்தியன்று, மனமன்று, உடம்பன்று, நான் சச்சிதானந்த சொரூபம் என்று வார்த்தையால் கூறுவது மட்டும் சேவையாகிவிடாது. எனது ஆத்மசொரூபத்தை இழக்காத வைராக்கியமும், அதைக் காக்கும் விவேகமும் கூடிய செயற்பாடே பேரறிவு. உலக இயற்கை ஒரு பாடசாலை, அந்தப் பள்ளியில் கட்டுண்டு கிடந்தால் ஆத்மசொரூபத்தை இழந்து விடுவாய், இயற்கையாகிய பள்ளிப் பாடத்தில் மூழ்குவது உனது ஆத்மசொரூபத்தை அறியும் பொருட்டே. நான் ஆத்மசொரூபம் இயற்கை என்மீது எந்தவித ஆதிக்கமும் செலுத்த இடமளிக்க மாட்டேன். நான் எனது என்ற பற்றுறுதி நீங்குதலே எனது செயற்பாடு. நான் எனது என்பதே மதம். மதப்பற்று நீங்கச் சுலபமான வழியே சர்வமத சம்மதம். எல்லா மதங்களையும் ஏற்பதால் 'எனது, நீங்குகிறது. சுயநலம் அகல்கிறது.

தன்னைக் காட்டிக் கொடுத்தவனையே மன்னிக்கும்படி பிதாவிடம் மன்றாடிய இயேசுகிறிஸ்துவின் வாழ்வு மதங்கடந்தது. புத்தர் பெருமான் பழிபாவத்திற்கு அஞ்சாத ஈனர்கட்கும் அன்பு செலுத்தினார். இவைதான் மனிதகுலசேவைக்கு நல்ல உதாரணங்கள். சேவையினால் சகிப்புத்தன்மை வளரவேண்டும். சேவை ஆண்டில் பல ஆயிரம் ரூபாய் பணத்தை பிறரிடம் வசூலித்து, அதனால் ஒரு சேவைத் திட்டத்தை முன்வைப்பதையோ, அதுபற்றிப் பெருமிதமான அறிக்கைகளுக்கு தயாராவதையோ பகவான் எங்களிடம் எதிர்பார்க்கவில்லை. எமது குழுவைச் சாராதவரை, இரண்டாந்தரமானவராகக் கருதி குரோதமான உணர்வுடன் நோக்கும் மனம் எம்மிடமிருந்து தொலையாதவரை எம்மைச் சேவைத் தகுதி வந்தடையாது. சேவைஉள்ளம்தான் வளர வேண்டும். சகிப்புத்தன்மை தான் வளரவேண்டும். சமநோக்கு சேவையினால் வளர வேண்டும். சமநோக்குடன் கூடிய தெய்வீகப் பார்வையை ஒவ்வொருவரிடத்தும் வளர்க்கும் ஆத்மஞான சேவையே 'சத்தியதரிசனம்' விரும்புகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாயி போதனைகளைச் சரிவர உணராத அறியாமையைக் களையவே 'சத்தியதரிசனம்' தோன்றியது, 11 வது தளிரையும் முளைவிடப் பகவான் அருள் செய்துள்ளார். குரு பூர்ணிமை தினத்தில் பிறந்த 'சத்தியதரிசனம்' தனது ஓராண்டு அகவையை 'குரு' என்றஞானமைய மலராகத்தந்து, உங்கள் உள்ளங்களில் 'குரு தர்சனமாக' மிளிர விரும்புகிறது. அதுவும் பகவானின் சித்தமே.

ஜெய்சாயிராம்.

★

'புயங்க சயனம்' பாம்புப்படுக்கையில் படுத்திருப்பவர். 'சாந்தாஹாரம்' அமைதி குடி கொண்டிருப்பவர் என்று மகா விஷ்ணுவை வர்ணிக்கின்றனர். விஷமுள்ள அப்பாம்பே இவ்வுலகம். நீங்கள் இவ்வுலகத்தில் இருந்துகொண்டே அது உங்களைப் பற்றிப்படர்ந்து கொள்வதற்குப் பதிலாக அதன்மீது சாந்தத்துடன் இருக்கவேண்டும். உங்களுடைய வாழ்க்கைப் படகு தண்ணீரின் மேல் மிதக்க வேண்டுமே தவிர தண்ணீர் படகினுள் புகுவதற்கு அனுமதிக்கக் கூடாது. நீங்கள் உலகத்தினுள் வாழுங்கள். ஆனால் உலகமாக மாறிவிடவேண்டாம். இதுவே வெற்றி வாழ்வின் இரகசியம்.

— பாபா —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபநிடதசாரம்;

# குருவைத் தேடி...

**கடோப நிடதம்:**

நூலறிவு (சாஸ்திரம்), உள்ளுணர்வுடன் கூடிய அனுபவம் (ஸ்வாநுபவம், குரு உபதேசம் இந்த மூன்றும் முரண்பாடின்றி ஒருங்குசேர இணைவதே தெய்வீகம். நசிகேதகனுடைய உள்ளுணர்வான அநுபவம் இயமனை பிரமிக்க வைத்தது. நசிகேதகன் சிறுவன். அவன் சாத்திர ஞானத்தைப் பெற்றிருக்கவில்லை. குருவின் பிரியத்துக்குரிய குருநந்தனன் அவன். குருவின் பிரியம் ஆசிர்வாதமாகப் பெருகுகிறது. பிரியத்துக்குரிய நசிகேதகனே! "நீ திட சித்தமுடையவன். குரு உபதேசம் உன்னிடத்தே தெளிந்த ஞானத்தை நிச்சயம் தரும். உன்னைப்போல் உபதேசத்தைக் கேட்கும் தகுதியுடையவர்கள் எமக்கு இனியும் கிட்டட்டும்." குருவான இயமனது ஆசிர்வாதம் உலகத்திற்கே பயன் தரும் ஆசீர்வாதமாகிறது. தகைமை வாய்ந்த குருவின் ஞானவேட்கையுடன் கூடிய உள்ளத்தைப் பாருங்கள். ஞானத்தைச் சிரத்தையுடன் கேட்கும் தலைமுறையொன்று உருப்பெற வேண்டுமென்ற குருவின் வாழ்த்துள்ளம் ஏன் பிறந்தது?

நசிகேதகனது தகைமை குருவிடத்தே தோற்றுவித்த உள்ளக் கிளர்ச்சியைப் பாருங்கள். 'சத்குரு' ஒருவர் ஞானத்தலைமுறை ஒன்றைத் தேடியே தாகமுடன் காத்து நிற்கிறார். நசிகேதகனே நீ அடைந்த புத்தி தர்க்க வாதத்தினால் அடையப்பட்டதல்ல, காரண காரியங்களுக்கு அப்பாற்பட்டது ஆத்மா. இதுவல்ல, இதுவல்ல என்று விலக்கி உண்மையைத் தேடும் வழிமுறையே ஆத்மாவைப்பற்றி உபதேசிக்கும்முறை, 'மனமன்று, புத்தியன்று, சித்தமன்று', என்று விளக்கிக் கூறும் வழிவகையே சிறந்தது. எனினும் அத்தியந்தமான குரு சிஷ்யப் பிணைப்பே ஆத்ம ஞானத்தை அறியும் வழி. நசிகேதகன் இயமன் உறவு, பிணைப்பு மிக நெருக்கமானது. இது எவ்வாறு சாத்தியமானது?

செல்வம் நிலையற்றது. அதுநிலைபேறான ஆத்ம ஞானத்தை அறிய உதவாது. ஆனால் அழியும் பொருட்களை யாக அக்னியில் பகவானுக்கு அர்ப்பணம் செய்தால் அழியாப்பயனை அடையலாம். திடசித்தமும், பொருள் பற்று நீங்கிய தன்மையும் மோட்ச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு உனக்காகத் திறந்திருக்கிறது என்று எண்ணுகிறேன் என்று இயமன் கூறுகின்றான். அந்த நிலையிலும் நசிகேதகன் மோட்சமே தன்குறியென்று கொள்ளாது, மெய்ப்பொருள் நாட்டம் உடையவனாய் நிற்கிறான். ஆத்மாவை உணர்ந்து கொள்வதுதான் உண்மையான மோட்சவீடு. மோட்சமென்று ஒரு தனியான புறப்பொருள் கிடையாது. ஆத்மாவை உணர்ந்தவன் பந்த பாசத்திலிருந்தும், பற்றுக்களிலிருந்தும் விடுபடுகிறான். இத்தகைய விடுதலையே மோட்சம், ஆத்மாவின் உண்மையான சொரூபத்தைக் காண்பதே வேண்டத்தக்க செய்கை. அவ்வாறு காணும்போது மகிழ்ச்சியும், துக்கமும் இரண்டும் அற்றுப்போகிறது. நாம் ஆசாபாசங்களுக்கும், சுகதுக்கங்களுக்கும் மத்தியில் இருப்போமேயானால் ஆத்மாவை அறியமுடியாது.

நசிகேதகனது தகைமை மோட்சவீடு திறந்திருக்கிறது என்று குருவினால் கூறப்பட்ட பின்பும், சிரத்தையுடன் மெஞ்ஞானத்தை யாசிக்கிறான். அந்த வார்த்தைகளே அவனது உள்ளுணர்வை வெளிப்படுத்துகிறது.

"அன்யத்ர தர்மா — தன்யத்ராதர்மா
தன்யத் ராஸ்மாத் க்ருதா — க்ருதாத்'
அன்யத்ர பூதாச்ச பவ்யாச்ச
யத்தத் பச்சஸி தத்வத"

(தருமத்திற்கும் அதருமத்திற்கும் அப்பாற்பட்டது. காரணத்திற்கும் காரியத்திற்கும் அப்பாற்பட்டது. உண்டானதிற்கும், உண்டாகப் போவதற்கும் அப்பாற்பட்டது. இத்தகையது எது என, நீ காண்கிறாயோ அதை எனக்குக் கூறுவாய்.) இவ்வாறு நசிகேதகன் தனது குருவிடம் கேட்கிறான்.

நன்மை தீமைஇரண்டிற்கும் அப்பாற்பட்டதான இயல்புடையதே மெய்ப்பொருள் என்பதை நசிகேதகன் உணர்ந்துள்ளான். தனது உணர்வினைக் குருவின் உபதேச மொழிகளால் உறுதி செய்து தெளிவுபெற விரும்புகின்றான், எவ்வளவு சாத்திரங்களைக் கற்றாலும் ஆத்மாவை உணராவிட்டால், மனம் நேர்வழிப்பட மாட்டாது. அத்தகைய கல்வி தர்க்கவாதத்திற்கு பயன்படுமே தவிர ஆத்ம ஞானத்திற்கு உதவாது. இதனை நன்குணர்ந்தவன் நசிகேதகன். தியாகத்தினால், பற்றற்ற தன்மையால், திட சித்தத்தால் குருவின் பார்வையை அடைந்தவன். தனது உள்ளுணர்வினை குரு உபதேசத்தினால் உறுதிப்படுத்திக்கொள்ளத் துடிக்கும் அவனது ஆர்வத்தைச் சற்று நிதானித்துப்பாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகுந்த குரு ஒருவருடைய அவசிய தேவையை இது உணர்த்துகிறது. சாத்திர ஞானம் இல்லாவிடினும், சத்குருவின் சேர்க்கையால் ஆத்மஞானத்தை அடையமுடியும். ''யோ மத் பக்தா ஸ மே ப்ரியா'' என்னிடம் பக்தி பூண்டவன் எவனோ அவன் என் அன்புக்கு பாத்திரமானவன் என்று கீதையில் கூறப்படுகிறது. இறைவனிடம் நான் செலுத்தும் அளவற்ற பக்தி, எமக்கு நல்ல குரு ஒருவரைத் தேடித்தரும். அளவற்ற தத்துவங்களைப் படித்திருந்தாலும் குரு உபதேசங்களை பயபக்தியுடன் செவிமடுத்துக் கேட்டு, குரு அர்ப்பணமாக இருந்தே ஆத்ம ஞானத்தைப் பெறவேண்டும்.

இன்று மேன்மையான கருணை மூர்த்தமான குரு ஒருவர் கிடைக்கப் பெற்றுள்ளார். ஆத்மீக ஞானத்தின் அதியுயர்ந்த நிலையை அவரால் எமக்கு வழங்கமுடியும். ஆத்மஞானத்தைப் பெற அருகதையற்றவர்களைக் கூட அவரால் வசமாக்க முடியும். பரம்பொருளே பரிபூரண உருத்தரிக்கும் மனிதரே அவர். தெய்வம் மனித உருவிலேயே குருவாக வரும். மனித உருவில் கண்டு அதன் குரலைக் கேட்டு அனுபவிக்கும் பேறுடையவர்களாக நாம் இருக்கிறோம். அந்தச் சத்குரு சாயியின் வார்த்தையை நினையுங்கள். ''நாம் பகவானிடத்தே அன்பாக இருக்கிறோம் என்று அடிக்கடி கூறுகிறீர்களே. உங்களிடத்து பகவான் அன்பாக இருக்கிறாரா ? என்று என்றாவது எண்ணிப்பார்த்ததுண்டா ? அப்படி எண்ணிப் பார்க்குமிடத்து, நீங்கள் அவருடைய வார்த்தைகளுக்கு மதிப்பளித்து நடக்கிறீர்களா என்று எண்ணிப் பாருங்கள்.

இயமனுக்கு நசிகேதகனிடம் ஏற்பட்ட பிரியமே அவனது ஆத்மாவை உணரும் தகுதியை மேன்மைப் படுத்தியது. நாமும் நசிகேதகன் போல எம் பொருட்டு நிதர்சனமாக உள்ள சத்குருவின் பிரியத்தைச் சம்பாதிக்க முயல்வோமாக (வளரும்)

ஓம் சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானவித்து:

# சிவயோகரும் ஸ்ரீ சாயியும்

**"அம்பலவாணரும் அம்பலவாணர் மகனும் நம்பெருமானாவது யாரறிவர்?"**

**எப்பவோ முடிந்த காரியம்!**

---

"நீ உடம்பன்று! மனமன்று, புத்தியன்று, சித்தமன்று, நீ ஆத்மா. ஆத்மா ஒரு நாளும் அழியாது. உது மகான்களுடைய அநுபவ சித்தாந்தம், இந்த உண்மையை உனது உள்ளத்தில் நன்றாய்ப்பதியக்கடவது.

ஆனால் நீ கவனிக்கவேண்டியது ஒன்றுண்டு. அதாவது தருமநெறியிற் பிசகாதே. எவ்வுயிரும் பெருமான் திருமுன்னிலை என்று சாதனை செய், கடவுள் உள்ளும் புறமும் உள்ளவர்.

— அவனே நானே.

"அகமுகமாகு. அப்போது ஆனந்தம் உண்டாகும்" என்று கூறும் சிவயோகர் மேலே தந்த அத்வைத மொழிகள் எம்மை அகமுமாக்கத் தகுந்த குருவாசகங்களாகும். அவனே நானே; என்ற உறுதிமொழியை எம்மிடையே பதியவைக்க குருவாக சிவயோகர் விளங்குகிறார். 'நீ கடவுள்' என்பது ஸ்ரீ சாயி வாக்கு.

"மகா அவதாரம் ஒன்று நிகழ்வதற்கு முன் பல ஏற்பாடுகள் பூமியில் நிகழ்கின்றன. பரிவாரங்கள் பல பூமியில் உதித்து அந்த அவதாரத்தை வரவேற்கத் துரித ஏற்பாடுகள் செய்கின்றன" என்று இராமகிருஷ்ண பரமஹம்சர் கூறுவார். ஏற்கனவே முத்திநிலை அடைந்த ஆன்மாக்களே ஆன்ம சேவையின் பொருட்டுப் பூமிக்கு அனுப்பப்படுகிறார்கள். இத்தகைய மகான்களுக்கு பிறவி ஒரு தளையாக இருப்பதில்லை. பிரபஞ்சம அவர்களை எதுவிதத்திலும் பந்திக்க முடியாது. அவர்கள் வாழ்வே ஆத்ம சேவை, சேவைப் பணி முற்றுப் பெற்றதும் அவர்கள் பரமாத்மாவுடன் ஒன்றித்து விடுகிறார்கள் என்று பகவான் கூறுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளமைக் காலம்!

சிவயோகரின் இளமைக்கால வாழ்வு மேற்படி விடயங்களை உறுதிப்படுத்துகிறது. சிவயோகரின் இளமைப் பெயர் சதாசிவன் என்றும் யோகநாதன் என்றும் கூறுகின்றனர். அவரது சிறுபராயத்தில் கொழும்புத்துறையில் வாழ்ந்த காலத்து 'அம்பலவாணர் மகன்' என்றே அழைக்கப்பட்டார்: ஆத்மாக்களெல்லாம் அம்பலவாணர் பிள்ளைகளன்றோ. இயேசு கிறிஸ்துவும், Iam Son of God' என்றுதானே கூறினார். 10 வயதிலே சுவாமி தாயாரை இழந்துவிட்டார். தந்தையார் பெயர் அம்பலவாணர். இவரது சகோதரி முத்துப்பிள்ளையே சுவாமியின் சிறுபராயத்தில் அவரைப் பராமரித்து வளர்த்தார். சுவாமியின் சிறியதந்தையார் சின்னையா கத்தோலிக்க மதத்தைத்தழுவியவர். இவரின் உதவியுடன் சுவாமி யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரியில் படித்தார். அக்காலத்தில் இவருடைய பெயருடன் ஜோன் என்ற கத்தோலிக்கப் பெயர் இணைத்துப் பதியப்பட்டிருந்தது. சுவாமி பெற்ற கல்வி ஓரளவே. ஆனால் பிற்காலத்தில் சுவாமியிடம் பிரவாகித்த ஞானப் பெரு வெள்ளம் அவர் பூமிக்கு வரும்போது கூட வந்ததே என்பதை நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

சிவயோகர் தத்துவாதீதனாகவும் சாதி சமயம் கடந்தவராகவும் விளங்கினார். ஆனால் அவரது தோற்றம் சுத்தாத்துவி தசைவ சித்தாந்திபோலக் காட்டியது. ஆனால் வேதாந்த சித்தாந்தம் கடந்த பரப்பிரம்மமாகச் சுவாமி நடந்து கொண்டார். அம்பலவாணர் மஸ்கெலியாவில் வியாபாரத் தொழிலில் ஈடுபட்டிருந்தார். சிவயோகரைத் தந்தையார் மஸ்கெலியாவுக்கு அழைத்துச் சென்றபோதும், அவர் அவருடன் தனது வாழ்வைக் கழிக்கவில்லை. தாமரை இலையிற் தண்ணீர் போல் அவரது இளமைக் கால வாழ்வு பந்த பாசத்திற்குட்படாததாக யோக வாழ்வாகக் கழிந்தது. குரு தரிசனம் பெறும் வரை சிவயோகரது சிறுபராயவாழ்வு விபரமாக அறிந்து கொள்ள திருவருள் துணை போகவில்லை. ஆனால் யோகரது ஆத்ம சொரூபம் மிகத் தெளிவாக உலகம் அறியக்கூடியதாக உள்ளது. ஆத்மா அழியாதது என்ற அனுபவ சித்தாந்தத்தை உலகம் அனுபவிக்கத் தூண்டும் வகையிலேயே சிவயோகரது வாழ்வு அமைந்திருந்தன.

சிவயோகர் சைவசித்தாந்தியா? அவரது கருத்துக்களில் வேதாந்தம் பளிச்சிடுகிறதே. அவர் சர்வமத சம்மதனாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கினாரே! என்று கூற முயல்வது உண்மை உணர்ந்த நிலையல்ல. சாதாரண உலகத்தவர் போல் அவர் வாழ்ந்தார். "அங்கும் இங்கும் எங்கும் நான், அதை அறியும் விசரன் நான்" என்றார். "அண்டமும் பிண்டமுமாய் இருந்தேன்" என்கிறார். அவர் உண்மையான ஆத்மசொரூபமே. ஆத்மாவை அறிந்த மோனநிலையே, தன்னைத்தான் அறிந்தவனே மிகப்பெரிய தெய்வம். ஒருவர் பிரம்ம அநுபவத்தை அடைந்த பின் அவர் மனித இயற்கைக்கு மேலான வாழ்வையும் அறிவையும் பெற்றவராகிறார். இந்த நிலையில் சிவயோகரது குருத் தன்மையினை அறிந்து கொள்வோமேயானால், எமக்கு குரு அநுபூதி கிட்டும், சிவயோகரது வாழ்வும் சிந்தனையும் சீவனடிகளின் நன்மை கருதியதாக இருந்தது. அவர் பிரம்மத்துடன் ஐக்கியப்பட்ட உணர்வினர். அவரைக் கடவுளுக்கு வேறானவராகக் கொள்ளலாமா?

மனித உருவில் வந்திருக்கும் தெய்வ அவதாரத்தைப் புரிந்து கொள்ள ஏற்றுநடக்க முடியாமல் தத்தளிக்கும் மூட மதியினர் நிறைந்தது இப்பிரபஞ்சம். சிவ நினைவுடன் வாழ்ந்த தந்தையொருவர் தான் பெற்ற மழலைக்கு ஈஸ்வராம்பா எனப் பெயரிட்டார். வெங்கப்பராஜு இவ்வம்மையாரைத் திருமணம் செய்தார். இவர்கள் வாழ்ந்த புண்ணியபூமி ஆந்திரபிரதேசத்திலுள்ள புட்டபர்த்தி என்ற குக்கிராமம். இத்தம்பதியருக்கு நான்காவது திருக்குமரனாக 1926ம் ஆண்டு நவம்பர் 23ம் திகதி சத்திய நாராயணன் அவதரித்தார். சிறுவயதில் அவரது விளையாட்டுத் தோழர்கள் அவரைக் 'குரு' என்று அழைத்தனர். சத்திய நாராயணன், தனது சகபாடிகளுக்கு பேனை, பென்சில், சிற்றுண்டி முதலானவற்றை மாயையிலிருந்து சிருட்டித்துக் கொடுத்தார். 6 வயதில் தோழர்கள் அவரை 'பிரம்மஞானி' என்றழைத்தனர்.

1940ம் ஆண்டு மே மாதத்தில் தன்னைக்காண வந்தோருக்குத் தானே 'சாயிபாபா' என்றும், மானிட உலகத்தை வீழ்ச்சியினின்றும் ஈடேற்ற வந்திருப்பதாகவும் அறிவித்தார்' அதே ஆண்டு தனது பாடசாலை வாழ்வை உதறி எறிந்து "நான் உங்களுக்கு உரியவன் அல்லன். நான் வந்த வேலை முடியவில்லை எனது பக்தர்கள் என்னை அழைக்கிறார்கள்", எனக்கூறி வீட்டை விட்டு வெளியேறினார். தனது பக்தர்களுடன் வாழ்ந்த காலத்தில் "மானஸ பஜரே குரு சரணம் துஸ்தர பவசாகர தரணம்" அடியார்களே! இன்பதுன்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பிறப்பு என்னும் கடலைக் கடக்க குருவினுடைய தெய்வீகப் பாதங்களை வணங்குங்கள்" என்ற பாடலுடன் பஜனையை ஆரம்பித்து வைத்தார்.

"என்னை எனக்கறிவித்தான் எங்கள் குரு நாதன்" என்ற குருவணக்கப் பாடலுடன் சிவயோகரது நற்சிந்தனை ஆரம்பமாகிறது. "குருவினுடைய பாதங்களை வணங்குங்கள்" என்ற கட்டளையுடன் சாயி பகவானது அருளாசி ஆரம்பிக்கிறது. தான் தரிசித்த செல்லப்பரைக் குரு என்றார் சிவயோகர். சத்குரு சாயி தனது முன்னைய அவதாரமான பாபாவுக்கு குரு வணக்கம் செலுத்துகிறார்.

பகவான் தன்னைச் சாயிபாபா என அழைத்தார். சிர்டி பாபா பற்றிப் பேசும்போது தனது முந்திய தேகம் என்றே குறிப்பிடுவார். "இந்தத் தேகம் ஆன்மா உறைவதற்காகக் கொடுக்கப்பட்ட வாடகை வீடே. தெய்வீக அன்பு ஒன்றே நீங்கள் செலுத்தக் கூடிய வாடகை" என்றார் பகவான். தேகம் சடம், தேஹி ஜீவன். ஆத்ம சாதனையாற் சடமும் சித்தாகிறது. தேகந்தானும் சைதன்யம் பெறுகிறது சாதனை இல்லையேல் போதனை சடமாகிறது. சுவானுபவத்தை அடைய வேண்டுமென்று துணிந்தவனை எதுதான் தடுக்கும் ஆற்றலுடையது. உனது சுவானுபவம் பன்மையை நீக்கி ஒருமையைக் காண்பதாக இருக்க வேண்டும். அதற்கு வழி தருமநெறி பிசகாத வாழ்வு.

சிவயோகர் "தரும நெறியிற் பிசகாதே" என்றார். "இந்த உலகத்தைத் தர்மக்ஷேத்திரமாக மாற்றுவதே எனது அவதார நோக்கம்" என்றார் பகவான்.

"தரும நெறியிற் பிசகாமல் தரணிதனில் வாழ் தன்னைத் தன்னால் அறியத் தியானத்தில் மூழ்கு" என்பது சிவயோகரது ஆப்த வாக்கியம். தன்னைத் தான் அறியும் சத்குரு போதமே சிவயோகரும் ஸ்ரீ சாயியும் உலகிற்கு அருளியது. இருவருமே 'கடவுள் உள்ளும் புறமும் உள்ளவர்' என்ற பேருண்மையை மிகத் துலாம்பரமாகி உலகிற்கு வழங்கியுள்ளனர்.

அகத்தே ஆராய்ந்து தேடுவது என்பது தன்னைத்தான் அறியும் சாதனையாகும். எமக்குள்ளே நிறைந்துள்ள பரிபூரணத்தை உணர்ந்து வெளிக் கொணர்வதாகும். இதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்டு சாதாரண இயல்பினர் எவற்றை மதித்து தெய்வீக வாழ்வை அறியாது தடுமாறி நிற்கின்றனரோ, அவற்றை, அவற்றின் அநித்தியத்தை அறிந்து கொள்வது தேகம், மனம், புத்தி, சித்தம் இவைகள் தெய்வீகத்தை அறியும் கருவிகளேயன்றி இது மெய்ப் பொருளாகாது என்று உணர்வதே. இது அநுபூதிமான்களுடைய, மகான்களுடைய அனுபவ சித்தாந்தம். இந்த உண்மையை அறிந்து உள்ளத்தில் பதிக்கும் வரை இடையறாது சாதனையில் ஈடுபடு என்பதே இருவரும் தரும் உபதேச வார்த்தைகள். புறத்தே கடவுளைக் காண்பது என்பது எல்லா உயிர்களும் ஈஸ்வர அம்சம் பொருந்தியவையே, அவற்றினிடத்தில் தெய்வம் உறையும், அவையும் கடவுள் தன்மையுடையவையே என்றுணரும் சமநோக்கைப் பெறுதல். நாம் செலுத்தும் அன்பு சுயநலமானது. சுயநலம் இல்லாவிட்டால் விருப்பும் இல்லை. வெறுப்பும் இல்லை. எல்லாம் ஒன்று என்று உணர்ந்தால் விருப்பு வெறுப்பு ஏது? சமத்துவ உணர்வே உண்மையான விடுதலை. தன்னுள்ளே நிறைந்திருப்பதை அறிவதே மோட்சம். தன்னுள்ளே நிறைந்துள்ள பூரணத்தை எவருடைய வார்த்தைகள் வெளிப்படுத்துகின்றனவோ அவை குரு உபதேசங்களாகும்.

எனது பணி, தெய்வப்பணி என்று இரண்டு இல்லை. தருமநெறி பிசகாத வாழ்வு, எவ்வுயிரும் எம்பெருமான் திருமுன்னிலை என்ற சாதனை இரண்டுமே இருவரும் தரும் ஒன்று பட்ட வழிகாட்டல்கள். '' உள்ளே இருப்பது எங்கும் போகாது இல்லாததும் வராது, ஆகவே நீ தெய்வத்துவத்தை தேடுவதும் தேவை இல்லை. பிரத்தியேக சாதனைகள் செய்வதும் தேவை இல்லை. செய்யும் பணி ஒவ்வொன்றையும் சாதனையாக இறைவனுக்கு அர்ப்பணமாகச் செய் ' என்கிறார் பகவான்.

(வளரும்)

ஓம் தத் ஸத்

☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*உபதேச மஞ்சரி:*

# பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் அருளுரை

## " காட்டு வழியினிலே கல்லுண்டு முள்ளுண்டு பார்த்து வழிநடந்தால் பயணம் எளிதாகும் "

ஆத்மீக சாதனையில் இமாலயத்தின் உயரத்தை பாரத மக்கள் எட்டியிருக்கின்றனர். மனித குலத்திற்கு வேண்டிய பரந்த ஞானப்பொக்கிஷத்தை கொடுத்திருக்கின்றனர். ஆனால் தற்காலத்தில் வைரச்சுரங்கத்தில் வாழ்ந்து நிலக்கரியைத் தேடும் அற்பர்களாக அலைகின்றனர். இந்த நாட்டின் குழந்தைகள் வைரத்தைத் தேடி எடுத்துப் பாதுகாக்க வேண்டும். தங்கள் முன்னோர் பெற்ற பெரும் பேறுகளைப்பற்றி பெருமைப்பட வேண்டும். ஒவ்வொரு மனிதனுடைய மகிழ்ச்சிக்கும், மனித சமுதாயத்தின் சந்தோஷத்திற்கும் வேதங்கள் அடிப்படை ஞானமாக இருக்கிறது. அது ஒற்றுமையையும், அமைதியையும், மனிதனுள்ளிருக்கும் தெய்வீகத் தன்மையையும் போதிக்கிறது.

உபநிடதங்கள், பகவத்கீதை, வேதாந்த சூத்திரம் ஆகிய மூன்று நூல்களும் ஆத்மீகத்தின் மேலான வாழ்விற்குத் தேவையானவைகளைப் போதிக்கின்றன. அத்வைத ஞானம் என்பது இந் நூல்களிலிருந்து பெறப்பட்டது. அத்வைதம் தேவன் ஒருவனே என்றும், ஜீவன் என்பது மாயத் தோற்றமே என்றும், பிரபஞ்சம் மட்டுமே நீடித்திருக்கிறது என்பதை உணராததால் ஏற்பட்ட தவறான முடிபு என்றும் கூறுகிறது.

" நானே குழந்தை, இறைவன் என் தந்தை, நானும் என் தந்தையும் ஒருவரே " இயேசு நாதரின் இவ்வாக்கியங்களை எண்ணுங்கள். ஒருவருடைய நோக்கம் தெளிவும், கூர்மையும் அடைந்தால், அவருக்குத் தான் வாழ்ந்து வருகிறேன் என்றமையைக் கருத்து வாழ்வின் மூச்சாக இருக்கும்வரை தன்னைப் பற்றியும், தான் சார்ந்திருக்கும் பிரபஞ்சத்தைப் பற்றியுமான ஞானம் தெளிவாகவும் கூர்மையானதாகவும் இருக்கும். ஒருவருடைய நம்பிக்கை போதனைக்குரிய விடயமாக மட்டும் இருக்கக் கூடாது. துன்பத்தில் உழன்றபோதுங்கூட அந்த நம்பிக்கையில் சிறிதும் தளர்வு ஏற்படக் கூடாது.

மனிதன் மட்டுமே புலன்களை அடக்கி ஆனந்த சக்தி உடையவனாக இருக்கிறான். பறவைகள், மிருகங்கள் மற்ற பிராணிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுக்கு பகுத்தறிந்து புறக்கணிக்கும் சக்தி இல்லை. அவைகள் மனம் போனபடி செயல்படுகின்றன. அவைகளால் விவாதம் செய்ய முடியாது. தீர்மானிக்க இயலாது. ஒப்புக்கொள்ளவோ வேண்டாமென்று புறக்கணிக்கவோ முடியாது.

யோகம் மனக்கிளர்ச்சிகளை அடக்குகிறது. மனக்கிளர்ச்சிகளை அடக்கிப் புலன்களை ஆளும் சக்தி மனிதனுக்கு இறைவனால் விசேடமாக அளிக்கப்பட்டிருக்கிறது. மனிதனுடைய இயல்பு ஞானத்தை அடைவது. ஆனந்தமே அவனுடைய சாரம். அன்பு அவனைத் தாங்குகிற இரத்த ஓட்டம். சாந்தி அவனுக்கு வழிகாட்டி அழைத்துச் செல்கிற பார்வை. உபநிடதங்கள் மனிதனை "அமிர்தஸ்ய புத்திரன்" என்று அழைப்பதற்கு காரணமே இதுதான். மனிதன் அழியாமையின் புத்திரன். அவனுக்கு பிறப்பு இறப்பு கிடையாது.

கீதையில் கிருஷ்ண பகவான், தான் மலைகளில் இமயமலை எனக் கூறியுள்ளான். இதிலிருந்து நீங்கள் கிருஷ்ண பகவான் தான் அவதரித்த தாய் நாட்டைப்பற்றி ஒரு நல்ல வார்த்தை சொல்லி விட்டார் என்று எண்ணிவிடக் கூடாது. தூய்மை, வெண்மை குளிர்மை இவை சாத்வீக நெறியின் இலட்சணம் அவற்றின் இருப்பிடமே இமயம். அதனை அடைய நீங்கள் ஹரித்வார் (தெய்வத்தை உணரும் வாயில்) வழியாக, ரிஷிகேசத்தின் (புலனடக்கம்) மூலமாகச் செல்ல வேண்டும். அப்பொழுதுதான் விடுதலை பெற்ற ஆன்மாவாக, அதாவது இறைபக்ச முடையவர்களாக ஆகமுடியும். கிருஷ்ண பகவான் இமயமலை தான் என்று சொன்னதன் உட்பொருள் இதுதான். நீங்கள் சரியான உட்பொருளை அறியாத வரை நம்பிக்கை உறுதியற்றதாகவும் சாதனை நிலையற்றதாகவும் இருக்கும்.

அத்வைத ஞானத்தைப் பெறும் பயிற்சியை தவிர்ப்பதால் ஏற்படும் பலன் பாபம், தாபம், அஞ்ஞானம் ஆகியவை வளர்ந்துவிடும். மனிதனுடைய உண்மையான தன்மை இம்மூன்றையும் நீக்குவதே. இராம நாமம் இதை நீக்கக் கூடியது. ஆத்மாவை ஆத்மா ராமன் என்கிறோம். இராமா என்றால் மகிழ்ச்சியை கொடுப்பது என்று பொருள். ஆத்மாவைப்போல முடிவற்ற ஆனந்தத்தைக் கொடுக்கும் பொருள் வேறொன்றுமில்லை. ஆதலால் இராமா என்றால் ஆத்மா என்று பொருள். ர - அ - மா என்ற மூன்றெழுத்தே ராமா என்பதில் உள்ளது. ர என்பது அக்கினி அது பாபத்தைச் சாம்பலாக்கக் கூடியது. அ என்பது சூரியனைக் குறிக்கும். அது அஞ்ஞானம் அல்லது அறியாமை என்னும் இருளைப் போக்குகிறது. மா என்பது சந்திரனைக்குறிக்கும். அது துன்பத்தின் தாபத்தைக் குளிர்ச்சியாக்குகிறது. ஆகவே ராமா என்ற சொல் மூவகைத் துன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்களையும் வென்று சத்தியம், சிவம், சுந்தரம் ஆகியவற்றை வெளிப்படுத்துகிறது. இத்தகைய உட்பொருளை உணர்ந்து ராம நாமத்தை ஜெபம் செய்யுங்கள், அதன் பலனை சீக்கிரம் உணர முடியும்

மனிதன் சத்தியம், சிவம், சுந்தரம், சாந்தி, பிரேமை ஆகியவற்றை இயல்பாகக் கொண்ட ஆத்மாவின் சொரூபம். ஆனால் அவன் தன்னுடைய இயல்புக்கு விரோதமாக பொய், அநித்யம் ஒழுங்கீனம், சோம்பல்; குழப்பம் ஆகியவற்றிற்காக ஏங்குகிறான், இது மிகத் தாழ்வானது அவமானகரமானது மனிதன் இவைகளிலிருந்து தன்னுள்ளேயே ஆனந்தம் சக்தி ஆகியவற்றின் மூலாதாரத்தை நாடவேண்டும். அவன் எத்தகைய வேலையை செய்கிற போதும் இறைவனை எண்ணிச் செய்ய வேண்டும். வேதங்களில் சொல்லப்பட்டிருக்கும் கர்ம காண்டம் இறைவனின் அருளைப்பெறுவதற்காக யாகங்களையும், யக்ஞங்களையும் குறிப்பிட்டிருக்கின்றனவே தவிர, சொர்க்கத்தில் ஆனந்த வாழ்வு வாழ்வதற்காக குறிப்பிடவில்லை. சொர்க்கத்தில் வாழும் ஆனந்த வாழ்வைப் பெற வேண்டும் என்ற ஆசையினால் ஆர்வம் தோன்றக் கூடாது இறைவன் அருளைப் பெறவேண்டும் பலனை அவர் விருப்பத்திற்கு விட்டுவிட வேண்டும் என்ற ஆசையினால் ஆர்வம் தோன்ற வேண்டும். யாகத்தின் பயன் பற்றிய மேலான நோக்கத்தையே நசிகேதகன் தன் தந்தைக்கு உபதேசித்தான்- சடங்குகளைச் செய்யும் சரியான முறையைப் பற்றி வலியுறுத்தக் கூடாது. ஆனால் சடங்குகளில் எழுந்தருளப்பட்ட இறைவனிடம் நிபந்தனையற்ற சரணாகதி அடைவதற்காக இருக்க வேண்டும்.

யாகத்தில் பலியிடுதல் முக்கிய பங்கு வகிக்கிறது. அதாவது கர்வம், வெறுப்பு, பேராசை போன்ற மிருகக் குணங்களை பலியீட்டு, மனிதன் தெய்வீகத் தன்மையைப் பெறவேண்டும் என்பதே அதன் உண்மைப் பொருளாகும். நீங்கள் கடைக்குப் பொருள் வாங்கச் சென்றால் அவைகளுக்குரிய விலை கொடுக்காமல் அவைகளை வாங்க முடியாது. ஆத்ம தத்துவத்தை அறிய விரும்பினால் ஆர்வமுள்ள மனம், ஆத்ம தத்துவத்தைக் கேட்டவுடன் 'பிரதிபலிப்பு' இதுதான் நீங்கள் கொடுக்க வேண்டிய விலை. நீங்களோ விலை கொடுக்கத் தயங்குகிறீர்கள். கடிவாளம் என்றால் வாயை மூடிக் கொள்ளும். கொள்ளு என்றால் வாயைத் திறக்கும் என்று குதிரையைப் பற்றி ஒரு பழமொழி இருக்கிறது.

நீங்கள் கேட்ட ஞான விடயங்களில் பலனளிக்கக் கூடியது எதுவோ அதைச் செயலாற்றி அதன் பிரதிபலிப்பாக இருங்கள், நசிகேதகன் இதைச் செய்தான், சுவேதகேது இதைச் சொன்னான் என்று சொல்வதால் என்ன பயன்? அவர்கள் சொன்னதை நீங்கள் கடைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடிக்காதவரை உபநிடதங்களும் வேதசாஸ்திரங்களும் மாயாவிக் கதைகளே. அவை கூறும் உண்மைகளில் உறுதி கொள்ளுங்கள். நம்பிக்கை வையுங்கள். அவைகளைக் கடைப்பிடித்து ஒழுகுவதில் ஆர்வங் கொள்ளுங்கள். அப்பொழுது தான் மற்றொரு நசிகேதகனோ, சுவேதகேதுவோ நம்மிடையே தோன்ற முடியும். இல்லையென்னில் மனித வரலாற்றில் ஒரே ஒரு நசிகேதகனும், சுவேதகேதுவுந்தான் இருப்பார்கள்.

நீங்கள் நூற்றுக்கணக்கான பிரேத ஊர்வலங்களைப் பார்த்திருக்கிறீர்கள், ஆனால் ஒரு பாடம் கூட கற்றுக்கொள்ளவில்லை. புத்தர் ஒரே ஒரு பிரேத ஊர்வலத்தை மட்டும் பார்த்தார். அது அவருடைய வாழ்வை மாற்றி உலகவரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தியது. நீங்கள் சந்நியாசிகளின் நீண்ட ஊர்வலத்தைப் பார்த்திருக்கிறீர்கள். புத்தர் ஒரே ஒரு சந்நியாசியைத் தான் பார்த்தார். நீங்கள் நூற்றுக்கணக்கான நோயாளிகளைக் கண்டிருக்கிறீர்கள். சந்நியாசியின் துறவு, நோயின் துன்பம், முதுமையின் இரங்கத்தக்க நிலை, இவைகள் புத்தரிடத்தில் ஓர் ஆழமான எண்ணத்தை ஏற்படுத்தின. வாழ்வின் இத்தகைய துன்பங்களுக்குப் பரிகாரம் காண அவர்தன் அரண்மனை, மனைவி, புதிதாகப் பிறந்த குழந்தை ஆகியவைகளைத் துறந்து வெளியேறினார். நீங்கள் உங்கள் மனத்தைப் பண்படுத்தினால், பண்படுத்தப் பட்ட அம்மனம், மாறிக் கொண்டிருக்கும் நிலைமைகளைப் வரவேற்றால், இப்பேச்சுக்கள் உங்களுக்குப் பயனுடையதாக இருக்கும். புராதன பூமியில் உள்ள இலட்சக்கணக்கான மக்கள் இந்த ஆன்மீக உரைகளைக் கேட்பதற்காக ஒன்று கூடியிருக்கிறபொழுது. அவர்கள் கேட்டவற்றில் பத்தில் ஒரு பாகத்தைப் பயிற்சி செய்தால் பாரத நாடு மற்றொரு முறையும், தன் ஆன்மீகப் புகழின் சிகரத்திற்கு உயரும். ஆனால் தடைகளாலும், சூழ்நிலைகளாலும், வாக்குவாதங்களாலும், சந்தேசங்களாலும். சோர்வடையாதீர்கள். அவைகள் நற்சகுனங்களேதவிர தீயவை அல்ல. நீங்கள் சனாதன தர்மத்தின் புனருத்தாரணத்தின் மூலம் அதனுடைய பூரண புகழின் ஆனந்தத்தை விரைவில் அனுபவிக்கப் போகிறீர்கள். அது நடந்தாக வேண்டும், நடக்கும் நிச்சயம் நடக்கும்.

'நீங்கள் மனந்தளராமல், உங்கள் மார்க்கத்தை ஆராய்ந்தறிந்து மனதை அலையவிடாமல் இருக்கச் செய்யுங்கள். புகழ்பெற்ற யோகி ஒருவர் சாதகனுக்கு வழிகாட்டினார். தெய்வீகத்தன்மை' அடைய வேண்டுமானால் 24 மணிநேரமும் இறை நினைவுடன் இருந்தால் 30 நாட்களுக்குள் தெய்வீகத்தன்மையை அடையலாம் எனக்கூறினார் சாதகன் யோகி சொன்னபடி சாதனை செய்தான்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36 நாட்கள் செய்தான். எதுவிதபயனும் ஏற்படவில்லை, உடனே மிக்க கோபத்துடன் யோகியிடம் சென்றான். யோகி 36 நாட்களும் அவன் செய்த சாதனையின் விபரத்தை விசாரித்தார். சாதகன் ''நான் அதிகாலை 4 மணிக்கு படுக்கையை விட்டு எழுந்திருக்கிறேன். 5 மணிக்கு காலைக் கடன்களை முடித்துக்கொண்டு தியானத்திற்கு தயாராகிறேன். 6 மணிவரை தியானம் செய்கிறேன் பிறகு 9 மணிவரை உலாவுகிறேன் சிறிது உணவு உட்கொள்கிறேன். சிலபக்கங்கள் படிக்கிறேன். நண்பர்களுடன் உலகநிலை பற்றி சிறிது நேரம் பேசுகிறேன். பிறகு குளிக்கிறேன். இடையிடையே ராம நாம ஜெபம் செய்கிறேன்' எனச் சாதகன் கூறினான். 'நீ இவ்வாறு ஒழுங்கற்ற நிலையில் சாதனை செய்வாய் என நான் எதிர்பார்க்கவில்லை. நான் உன்னிடம் 24 மணி நேரத்தையும் ஒரு விநாடிகூட வீணாக்காமல் இறை தியானம் செய்யும்படி கூறினேன் நான் உனக்கு வேறு எவ்விதச் செயல்களையும் செய்யும்படி கூறவில்லை. 30 நாட்களையும் கலப்பற்ற தியானத்திலே செலவழித்தால் நீ மோட்சத்தை அடைவாய் எனக் கூறினார்.

யோகியின் புத்திமதியைக் கடைப்பிடிக்கும் சிறந்த முறை, இந்த உடல் இறைவனின் ஆலயம், நீங்கள் உட்கொள்ளும் உணவு இறைவனுக்கு செய்யும் நிவேதனம். குளிப்பது உங்களுக்குள்ளே இருக்கும் இறைவனுக்கு செய்யும் அபிஷேகம். நடக்கும் பூமி அவருடைய நாடு. அனுபவிக்கும் ஆனந்தம் அவருடைய பரிசு துன்பம் அவர் போதிக்கும் பாடம் என்று நம்புவது தான் வெய்யில் - மழை, பகல் - இரவு, உறக்கம் விழிப்பு ஆகிய எந்நிலையிலும் அவரை நினைவு கொள்ளுங்கள், இது தான் யோகி, சாதகனுக்குப் போதித்த கலப்பற்ற உண்மை.

வாழ்க்கை ஒரு கானகம், அங்கு அநேக பட்டுப்போன மரங்கள் இருக்கின்றன அவைகள் பலவித விஷக்கிருமிகளுக்கு இடம் அளிக்கின்றன. கானகத்தின் தரையை யாரும் சுத்தப்படுத்துவதில்லை. மரங்களின் கீழே முளைக்கின்ற முட்புதர்களையும், அட்டைகள் நிறைந்திருக்கும் தரையையும் கடந்து செல்ல ஒருவர் காலணி அணிந்திருக்கவேண்டும் அதைப்போல ஒருவர் யாருக்கும் தீங்கு செய்யாமல் வாழ்வின் கானகத்தைக் கடந்து செல்ல வேண்டுமானால் ''புலன்களை ஒழுங்கு படுத்துதல் என்ற காலணியை அணிய வேண்டும்'' இப் பயிற்சியை சிந்தித்து சாதனை செய்ய வேண்டுமென நான் விரும்புகின்றேன்.

ஓம் சாந்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சிறுவர் பகுதி*

# மழலை ஞானம் - வளருஞ்செடி

*சாயி மழலைச் செல்வங்களே!*

உங்கள் கல்விக்கூடங்களில் எத்தனையோ சேவைக்கழகங்கள் உள்ளன. சாரணீய வழிகாட்டி, சமூகசேவைக் கழகங்கள், சமயத் தொண்டர் அமைப்புக்கள் இவற்றில் ஏதாவது ஒன்றின் உறுப்பினராகவும் நீங்கள் இருக்கலாம். உங்கள் பெற்றோர் இதற்கு ஊக்கம் கொடுக்கலாம். அல்லது நச்சரிக்கலாம். இத்தகைய சேவையில் ஈடுபடுவதால் உங்களிடையே அன்பு வளர்கிறதா? பிறரை நேசிக்கும் உள்ளம் வளருகிறதா. எத்தனை ஆண்டுகள், எத்தனை பாராட்டுகள், பட்டிகள் பெற்றாலும் அன்பு என்னும் திறவுகோல் இல்லையேல் இவற்றால் எதுவிதபயனும் இல்லை. சேவை அன்பை வளர்ப்பது. மனித உறவை, மனித நேயத்தை, மனிதக்குணங்களை வளர்ப்பது. சேவையில் ஈடுபடுங்கள். கர்வம் தொலையட்டும். பெருமை, படோபம், செருக்கு நீங்கட்டும். அன்பு இளகிய நெஞ்சம, இரக்கம் இவை சேவை மூலம் பெருகட்டும்.

*கதையமிர்தம்: 10*

# சத்தியத்தை மறைப்பது எது?

ஒரு சீடன் இருந்தான். அவனது முன்னோர்கள் பெருமைக்குரியவர்கள். பேர் பெற்ற பரம்பரையில் வந்தவர்கள். இதனால் அந்தச் சீடனுக்கு தற்பெருமை. அவனுடைய குரு மிக உத்தமர், மகாத்மா. நல்ல நெறியில் வாழ்ந்து, பிறரை வழிநடத்துபவர். இதுவும் சீடனுக்கு மேலும் பெருமை தந்தது. ஒருநாள் அவனுடைய உத்தமகுரு அவனை அழைத்தார். தான் கேட்கும் எந்தக் கேள்விக்கும் உன்னால் விடைகூற முடியுமா? என்று குரு கேட்டார். சீடன் பதில் கூறத் தயாரானான். தனது பரம்பரைப் பெருமையைக் கூறினான். என் தந்தை பெரிய அறிஞர். குருவே! உங்களுடைய காலடிக்கிழ் அமர்ந்து பல்லாண்டுகளாகப் படித்திருக்கிறேன். நீங்களே பலமுறை பாராட்டி இருக்கிறீர்கள். உங்கள் வாயசல் ஒருமுறையேனும் நான் கண்டிக்கப்படவில்லை. எந்தக்கேள்வி கேட்டாலும் என்னால் பதில் சொல்லமுடியும் என்று தலை நிமிர்ந்து தனது குருவிடமே பெருமைபேசி நின்றான். குருவே எல்லாம் தங்கள் கடாட்சமே என்று கூறினாலும், தான் யாரிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசுகிறேன் என்ற எண்ணமே இல்லாதளவிற்கு பெருமை அவனை மறைத்து நின்றது.

குரு சீடனின் மனநிலையை நன்கறிந்தவராக புன்முறுவல்பூத் தபடி "பசு என்ற சொல்லின் பொருள் யாது? என்று கேட்டான். போயும் போயும் உங்களுக்கு இந்தச் சாதாரணமான கேள்விதான் கிடைத்ததா?" பசுஎன்றால் பால்தரும் வீட்டுமிருகம் ' என்று பதில் அளித்தான். நல்லது! பசு என்றால் உயிர் என்று பொருள். "பஸ்யதி இதி பசு" இந்தஉலகை எது பார்க்கிறதோ அதுவே பசு, அதாவது புறஉலகைப் பார்த்து உண்மையை உணராது உலக இயற்கையில் கட்டுண்ணும் தன்மை வாய்ந்தஉயிர் என்று குரு விளக்கினார். எல்லாம் அறிந்திருந்தும் அந்தச் சீடன் பெருமை பேசியகாரணத்தால், அறிவு மறைக்கப்பட்டு, உண்மையை உணர்ந்து கூறும் நிலையை இழந்து விட்டான். உங்களுடைய பார்வையில் அன்பு கலந்து, அப்பார்வை பிரகாசம் அடைந்தால் மட்டுமே, உங்களால் சத்தியத்தைக் காணமுடியாது. உண்மையை உணரமுடியும். உண்மையை உணருவதற்குப் பெருந்தடை அகங் காரம், தற்பெருமை, செருக்கு என்பனவயே என்று குரு விளக்கம் அளித்தார்.

— பாபா

**கருத்தமிர்தம்:**

மழலைச் செல்வங்களே! நீங்கள் மங்காத ஒளி விளக்குகள்... உங்களுடைய ஒளி மேலும் பிரகாசமடைய அன்பு என்ற எண்ணெய் ஊற்றவேண்டும், அன்பு பிறக்க அருமையான வழி உண்டு. நல்ல ஒழுக்கமுள்ள பரம்பரையிலே தாய், தந்தையாரிடத்தோ நீங்கள் தோன்றியிருப்பது உங்கள் பாக்கியமே. நல்ல ஆசானிடம் கல்வி பெறுவது மேலும் பாக்கியமே, சேவைப்பணியில் ஈடுபடச் சந்தர்ப் பம் கிடைத்தது மிகமிகப் பாக்கியமே. இவை யெல்லாம் பணிவை யும், கனிவையுந் தான் உங்களிடத்தே தோன்றச் செய்யவேண்டும். பெருமையை ஒரு போதும் கொள்ளத் துணியாதீர்கள். பணிவது தான் பெருமையே அன்றி தலைநிமிர்ந்து நிற்பது செருக்காக ஆகிவிடும். நமக்கு நன்கு புரிந்த உண்மைகளே மறைந்து போய்விட எம்மிடம் தோன்றும் பெருமை காரணமாகிவிடும். வேண்டாம்! பெருமை. அன்பு கனியப் பணிவே வேண்டும்.

— சத்யா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எளியபாதை இது ...!

*சத்தியப்பாதை மிக எளிதானது. இதிற் காலூன்றி நடந்து விழிப்புணர்வு அடைந்தவர்களே! மேலும் பலரது விழிப்பிற்கு தூண்டு கோலாக மாறுங்கள். தூங்குபவர்கள் எழும்புவார்கள். பாசாங்கு செய்வோர் பரிகாசம் செய்வார்கள். பகவானே யாவர்க்கும் கதி... அடுத்த இதழ் குருதர்சனமாகும். குருதர்சனம்பெற—*

So, he
3/1, Kaladdy Pillayar Veethy
Jaffna.

இனி(ய) அவர்
கோவில் வீதி,
கோக்குவில் கிழக்கு

தளிர் — 11
23 வைகாசி 1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அற்புதமும் ஆத்மீக சாதனையும்

யாழ் நகரம் யுத்தக் கொடுமையால் அல்லோல கல்லோலம் அடைந்த வேளை, மக்கள் கதிகலங்கிப் போயிருந்தனர். சஞ்சலம் தீர்ப்பான் சாயி என நம்பினர். சாயி நாமத்தில் இரவு பகலாக ஆழ்ந்து கிடந்தனர். பகவானின் உருவம்பதித்த மோதிரம், பென்தன் இவைகளை அணிந்து ஆறுதல் பெறத் துடித்தனர். இவை அக்காலத்தில் கிடைப்பது அரிதாக இருந்தது. ஒரு பக்தைக்கு பகவானின் அபயக்கரம் காட்டிய பகவானின் உருவம் பதித்த மோதிரம் கிடைத்தது. அவர் போர்ச் சூழ்நிலையால் மிக மனம் குழம்பியிருந்தார். பயபக்தியுடன் அந்த மோதிரத்தை அணிந்து ஆறுதல் பெற்றார் அவர். அந்த மோதிரம் கையிற்கு இறுக்கமாக இல்லை. அவர் தண்ணீர் அள்ளும்போது, தவறிக் கிணற்றுள் வீழ்ந்து விட்டது. பக்தையோ மிகவும் தாங்க முடியாத கவலை அடைந்தார். அந்த மோதிரத்தை மீட்டுத் தரும்படி பகவானிடம் மன்றாடினார். நண்பகல் சூரிய வெளிச்சத்தில் பகவானின் உருவம் கிணற்றின் அடிப்பகுதியிலிருந்து பளிச்செனத் தெரிந்தது. அதைப் பார்த்து அவர் ஆறுதல் அடைவார். பகவான் உன்னை இடையறாது நினைப்பதற்கு செய்த உபாயமே இது என அவரது கணவர் கூறினார். தினமும் நண்பகலில் கிணற்றுள்ளிருக்கும் அந்தமோதிரத்தை தவறாது வணங்கு என்றார். நிலாக் காலத்தும் இவ்வாறு பார்க்கமுடியுமோ, எனப் பக்தை எண்ணினார் — என்ன அதிசயம்! அவரது கணவர் பூரணை தினத்தன்று அதிகாலை 3-30ற்கு நீராட கிணற்றடிக்கு சென்றார். மோதிரம் கிணற்று மிதியில் கிடந்தது. அதை பக்தியுடன் எடுத்துப் பத்திரப்படுத்திக் கொண்டார். நண்பகல் வந்தது. கிணற்றைப் பார்த்தார். அங்கே அந்த மோதிரம் இல்லை. பகவான் தனது வேண்டுதலை ஏற்றுக் கொண்டது பக்தரை மெய் சிலிர்க்க வைத்தது. நம்பிக்கை ஆழவேரூன்றியது. ஆத்மீகப் பாதை தெளிவாகத் தெரிந்தது.

சாயி அற்புதங்கள் மக்களைத் திரட்டவோ, வேடிக்கை காட்டவோ, பகவானது பெயருக்கு விளம்பரம் செய்யவோ நிகழ்த்தப்படுவதில்லை. அற்புதங்கள் தெருக் கூத்து அல்ல. ஒரு சாதகரது இதயத்தில் வேர்விடும் தெய்வீக நம்பிக்கையை ஆழமாக்கவும், அவர் ஆத்மீகப் பாதையில் அடியெடுத்து நிதானமாக நடந்து தெய்வீகத்தை அடையவுமே பகவானால் அற்புதங்கள் நிகழ்த்தப்படுகின்றன. உள்ளுணர்வான அநுபவத்தையே அது உருப்பெறச்செய்கிறது.

— பாபா —

சாந்தி அச்சகம் - யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org